# மகுடி

## கேள்வி
✻✻✻✻✻✻✻✻☆☆
## பதில்கள்



செல்வி ராணி மரியாம்பிள்ளை
சில்லாலை.

ஃ இரட்சகன் என்பவன் யார?

O தான் அனுபவித்த இடர்களைச் சுடராக்கி வழிகாட்டுபவனே இரட்சகன்.

செல்வி. குமுதினி - மாதகல்

ஃ கல்வி எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்?

O நாட்டிற்கு உழைக்கும் பக்குவத்தையும் பண்பையும் ஊட்ட வேண்டும்: பரீட்சைப்படி ஏறுவதற்கானது, படிப்பல்ல.

செல்வன். புவிராஜசிங்கம் - பளை

ஃ அரசியல்வாதியின் சிந்தனையெல்லாம் எதனில்?

O அடுத்த தேர்தலில்; அடுத்த தலைமுறையிலல்ல.

செல்வன். குமரன் - மானிப்பாய்

ஃ ஜனநாயகம் பற்றி சிறிது செப்பும் மகுடியாரே!

O வாக்குச் சீட்டிற்கும் துப்பாக்கி வேட்டிற்கும் இடையில் ஆடும் ஊஞ்சல்.

செல்வன் சுகுமார் தம்பிராசா - சாவகச்சேரி

ஃ எமது மாணவர் பற்றி உமது கருத்து?

O பொம்பர் அடியிலும், ஷெல் அடியிலும், நுளம்புக் கடியின் மத்தியிலும் நிறையப் புள்ளிகள் எடுக்கும் பெரும் புள்ளிகள்.

செல்வன். மணிசேகரன் - ஆவரங்கால்

ஃ கொடுமை எது? கொடுமையிலுங் கொடுமை எது?

O பிறந்த மண்ணிலேயே அகதியாக்கப்படுவது கொடுமை, அகதி முகாம்கள் மீது குண்டு போடுவது கொடுமையிலும் கொடுமை.

இ. நந்தகுமார் - கிளிநொச்சி

ஃ பைத்தியக்காரர்களுக்கும் பத்திரிகை நிருபர்களுக்குமுள்ள ஒற்றுமை என்ன?

O இருவரது பைகளுக்குள்ளும் (சட்டைப்பைகள் உட்பட) காகிதங்கள் நிறைந்திருக்கும்.

செல்வி. ரதினி - நல்லூர்

ஃ தமிழன் நிலை பற்றி விளக்கும்!

O அகிலமெல்லாம் அகதி; அதுதான் ஜனநாயக ஆட்சியின் மாட்சி.

செல்வன். நாதமணி - வரணி

ஃ மாதவி கற்பில் சிறந்தவளா?

O கற்பிலும் சிறந்தவள், அவள் கலையும் கற்பில் சிறந்தது.

செல்வன் பிரகாசம் - ஊறாவத்தை

ஃ வீடுவரை உறவு, வீதிவரை மனைவி, காடுவரை யாரோ?

O குத்திய பச்சை.

செல்வன் பரணிதரன் - அச்சுவேலி

ஃ மது எமது பொருளாதாரத்தைப் பாதிக்குமா?

O குழந்தையில் கேட்ட பாடல் ஒன்று இன்றும் ஞாபகமாக இருக்கிறது:

"கள்ளுச், சாராயம், விஸ்கி, கஞ்சா, அபின், பிரண்டி கொள்ளை கொண்டு போகுதையோ கோடானது கோடி திரவியத்தை......"

செல்வி. ஞானமலர் - தும்பளை

ஃ நீர் எவற்றை விரும்புவதில்லை?

O ஆள்வதையும் விரும்பவில்லை; ஆளப்படுவதையும் விரும்பவில்லை.

**அடுத்த இதழில் இருந்து கேட்கப்படும் மிகத்தரமான கேள்விக்கு - மில்க்வைற் அதிபர் திரு. கனகராசா அவர்கள் 50/- ரூபா பரிசளிப்பார் என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.**

செல்வி. பொன்மணி - மானிப்பாய்

ஃ இராணுவம் ஏன் யாழ்ப்பாணம் வந்தது?

O துப்பாக்கி முனையில் அரசமரம் நடுவதற்கு.

செல்வி. கௌரிமனோகரி - திக்கம்

ஃ நல்லநாள் பெருநாளில் பிள்ளைகளைப் பிரிந்திருக்கும் பெற்றோர் பிள்ளைகளை நினைத்து கண்ணீர் வடிப்பதில்லையா?

O பொங்கலும் பொங்கும்; கண்ணீரும் பொங்கும்.

ரவிகணேசன்- மானிப்பாய்

ஃ ஒரு செய்தி கூறும் மகுடியாரே!

O கோயில்வீதியில் தேரோடுது, ஆகாய வீதியில் சகடை ஓடுது.

செல்வன். சாம்பசிவம் வேதவனம் மூளாய்

ஃ யுத்தகாலச் சிந்தனை ஒன்று கூறும்!

O வேட்டு கொல்லாமல் விடலாம்; வதந்தி கொல்லும்.

நாகமணி மகேந்திரலிங்கம் - சங்கானை

ஃ தாய்மை, நேர்மை, வாய்மை - ஒப்பிடுக!

O தாய்மையில் எல்லாம் அடங்கி விடுகிறதே?

செல்வி. கே. கல்பனா - மானிப்பாய்

ஃ புயலோடு பூகம்பம் ஏற்பட்டால்?

O அது சீற்றம் கொண்ட இயற்கை அன்னையின் சம்கார நடனம்.

செல்வன். குமார் - ஆவரங்கால்

ஃ ஞானப்பழங்கள் மேடையில் பேசும் போது தத்துவமுத்துக்களாய் உதிர்க்கின்றனவே!

O மயில் இறகு போடுவது சகஜம் தானே.

செல்வி. உஷா - நீர்வேலி

ஃ புரிந்துணர்வு இல்லாவிட்டால் ...?

O சமாதானம் ரத்து; சம்சாரமும் ரத்து.

செல்வி. வனிதா- முத்திரைச்சந்தை

ஃ உலகில் ஞானி எதைக் காண்கிறான்?

O தாய்மையைக் காண்கிறான்.

செல்வி. கௌரி - மானிப்பாய்

ஃ வாழ்க்கையில் பிரகாசிக்க என்ன செய்ய வேண்டும்?

O தோல்விகளை மனவீணையில் மீட்டுபவன் தேய்பிறையாகிறான் - வெற்றிகளை மீட்டுபவன் வளர்பிறையாகிறான்.

ஃ மனைவி எப்போது ஆச்சரியக் குறியாக மாறுகிறாள்? எப்போது கேள்விக் குறியாக மாறுகிறாள்?

O கணவனைப் பார்த்து சமூகம் ஆச்சரியக் குறியாய் நின்றால் மனைவி கேள்விக் குறியாக மாறுவாள்.

செல்வன். சிவம் - அராலி

ஃ மனிதகுல ஒற்றுமை வேற்றுமையைக் கூறும்!

O மனிதன் சுவாசிப்பது ஒரே காற்று; யோகிப்பதோ வேறு.

செல்வன். குமாரவேல் - வரணி

ஃ அட்சய பாத்திரத்திற்கும் பிட்சா பாத்திரத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன ?

O அட்சய பாத்திரம் சுரக்கும், பிட்சா பாத்திரம் இரக்கும்.

செல்வி. கவிமணி - நல்லூர்

ஃ தமிழீழத் தேசியப் பாடல்களில் உமக்கு எந்தப் பாடல் கூடுதலாகப் பிடிக்கும் ?

O பூச்சரத்தில் எந்தப் பூ கூடுதலாகப் பிடிக்கும் என்று கேட்டாற் போல் இருக்கிறது.

செல்வன். செந்திவேல் - துன்னாலை

ஃ எவன் அநுதாபத்துக்குரியவன் ?

O பிறர் அநுதாபத்தை எதிர்பார்ப்பவன்.

செல்வி. கலா - சண்டிலிப்பாய்

ஃ தமிழ் இனம் இன்று தீக்குளிக்கின்றதே ...!

O பொன் தானே புடம் போடப்படுகிறது.

செல்வி. மங்களம் சின்னையா - வதிரி

ஃ உமக்கு தெய்வ நம்பிக்கை உண்டா ?

O தன்னம்பிக்கை சமன் தெய்வ நம்பிக்கை - எனக்கு தெய்வ நம்பிக்கை உண்டு.

செல்வன் றமேஷ் - ஆவரங்கால்

ஃ கோழைகளால் இன்பம் அனுபவிக்க முடியுமா?

O ''வீரர்களால் மட்டுமே உலகில் இன்பம் அநுபவிக்க முடியும்'' என விவேகானந்தர் கூறுகின்றார்.

செல்வி. வாசுகி சிதம்பரம் - கொக்குவில்

ஃ இன்று உலகம் நெருக்கடியான நிலையில் இருப்பதன் காரணம் என்ன ?

O நாடுகள் இன்று தமது சுதந்திரத்தையும், எதிர்காலத்தையும், தமது தர்மத்தையும் பாதுகாக்க வேண்டிய நெருக்கடியான கால கட்டத்தில் வாழ்கின்றன.

காலத்தால் அழியாத காவியம் தான் பாரத்...
கருத்தொருமித்த வண்ணங்களின் படைப்பு
இங்கே

ஐம்பது வருடகால அனுபவ முதிர்ச்சி....

அன்றும், இன்றும், என்றும்
எங்கள் சேவையின் வளர்ச்சி.

கறுப்பு, வெள்ளை படங்கள்,
பாஸ்போட் படங்கள்,
அடையாள அட்டைப்படங்கள்,
கலர் படங்கள்
விரும்பிய போது விரும்பியவாறு
புகைப்படம் எடுக்க

வாருங்கள்...

# பாரத் ஸ்ரூடியோ

82/1 & 2 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மாற்றுக்குன்றாத மனங்கவர்
தங்க வைர நகைகளை...
எண்ணம் போல் வண்ணவண்ண வேலைப்பாடுகளில்
பெற்றுக்கொள்ள
நீங்கள் நாட வேண்டிய இடம்

# மதுராஸ் யுவலறி மாட்

தங்க நகை, வைர நகை வியாபாரிகள்

த. சி. இராசையா
உரிமையாளர்

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நங்கையர் விரும்பும்
நவீன டிஷைன்களிலான
அழகிய தங்க வைர நகை
வியாபாரிகள்

ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.

# அருள் முருகன் நகை மாளிகை

96/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பொருளியல்: திரு. வரதராஜன்

# G. A. Q.

B-A பட்டப் படிப்புகளிற்கும்

# A/L 92 - 93

கலை வர்த்தக வகுப்புகளிற்கும்

யாழ். நகரில் பிரசித்திபெற்ற கல்வி நிலையம்

# "பாரதிதாசன்"

கல்வி நிலையம்

சிறீதர் திரைஅரங்கு முன்பாக

அருச்சுனா வீதி,

யாழ்ப்பாணம்.